திமுக நிர்வாகிகளுடன் துணை முதல்வர் கலந்துரையாடல்

முன்னேற்பாட்டு பணிகளை தேனி எம்பி ஆய்வு

▶ தேனி அருகே மதுராபுரியில் திமுக சார்பு அணி நிர்வாகிகளுடன் நடக்க உள்ள கூட்டத்திற்கான முன்னேற்பாட்டு பணிகளை தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்பி ஆய்வு செய்து பார்வையிட்டார்.

தேனி, ஜூன் 14: தேனி அருகே மதுராபுரியில் நாளை மறுநாள் (16ம்தேதி) நடக்க உள்ள தேனி ஒருங்கிணைந்த மாவட்ட திமுக சார்பு அணி நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்திற்கு வரும் துணை முதல்வரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கூட்டத்திற்கான ஏற்பாட்டு பணிகளை தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தங்கதமிழ்செல்வன் ஆய்வு செய்தார்.

தேனியில் நாளை மறுநாள் (16ம்தேதி) மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அனைத்துத் துறை சம்பந்தமான ஆய்வு கூட்டம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடக்க உள்ளது. இதனையடுத்து, தேனி நகரில் உள்ள தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தேனித் தொகுதி எம்.பி தங்கதமிழ்செல்வன் அலுவலக அறையை துணை முதல்வர் திறந்து வைக்கிறார். இதனைத்தொடர்ந்து தேனி அருகே மதுராபுரியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தேனி ஒருங்கிணைந்த மாவட்ட திமுக சார்பு அணிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடுகிறார்.

இதற்காக தேனி நகர் தொடங்கி தேனி அருகே மதுராபுரி வரை சாலையின் இருபுறமும் திமுக கொடிகள், தோரணங்கள், வரவேற்பு பதாகைகள் என கோலாகல விழாவிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இதன்படி, நேற்று தேனி அருகே மதுராபுரியில் திமுக சார்பு அணி நிர்வாகிகளுடன் நடக்க உள்ள கூட்டத்திற்கான ஏற்பாட்டுப்பணிகளை தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி நேரில் ஆய்வு செய்து பார்வையிட்டார். அப்போது பெரியகுளம் தொகுதி எம்எல்ஏ சரவணக்குமார், தேனி வடக்கு நகர திமுக பொறுப்பாளர் சூர்யாபாலமுருகன், போடி நகர செயலாளர் புருசோத்தமன், தேனி நகர் மன்றத்துணைத் தலைவர் வக்கீல்.செல்வம், தேனி வடக்கு மாவட்ட திமுகதக வல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ், தேனி நகர்மன்ற கவுன்சிலர் சதீஷ், தேனி நகர திமுக இளைஞரணி அமைப்பாளர் அரவிந்த் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

டூவீலர் மோதியதில் ரயில்வே கேட்கீப்பர் பலி

தேனி, ஜூன் 14: தேனி அருகே முத்துத்தேவன்பட்டியை சேர்ந்தவர் சுபாஷ் மகன் மாரிமுத்து(49). இவர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின்னர், தேனி நகர் கருவேல்நாயக்கன்பட்டியில் உள்ள ரயில்வே கேட்டில் கேட்கீப்பராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை இவர் டூவீலரில் கருவேல்நாயக்கன்பட்டி தேவர் சிலை அருகே சென்றபோது, எதிரே அதிகவேகமாக வந்த மற்றொரு டூவீலர் இவர் மீது மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே ரயில்வே ஊழியர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து இறந்து போன மாரிமுத்துவின் மனைவி கவிதா அளித்த புகாரின் பேரில், தேனி போலீசார் மாரிமுத்து மீது வாகனத்தை மோதி விபத்து ஏற்படுத்திய தேனி அருகே பிராதுகாரன்பட்டியை சேர்ந்த முத்துப்பாண்டி மகன் அருள்குமார்(28) மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தரம் பிரிக்கும் பணி

▶ கடமலை மயிலை ஒன்றியத்தில் ஒருடன் தேங்காய் பருப்பு ரூ.57 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் எதிரொலியாக வருசநாடு அருகே தேங்காய் பருப்புகளை தரம் பிரித்து எண்ணெய் பருப்புகள் எடுக்கும் பணியில் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். உள்படம்: உலர்களத்தில் கிடக்கும் தேங்காய் பருப்புகள்.

போடி 23வது வார்டு பகுதியில்

மக்களைத் தேடி நகராட்சி நிர்வாகம் முகாம்

போடி, ஜூன் 14: போடியில் நேற்று 23வது வார்டில் மக்களை தேடி நகராட்சி நிர்வாகம் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நகர் மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் தலைமை வகித்தார். கமிஷனர் பார்கவி முன்னிலை வகித்தார்.

அந்த வார்டில் உள்ள குப்பிநாயக்கன்பட்டி, பிள்ளையார் கோயில் தெரு, மருது பாண்டியர் தெரு, போடி மெட்டு பாதை, வெற்றி தியேட்டர் சாலை ஆகிய பகுதிகளில் ஒட்டு மொத்தமாக தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலர்களால் தூய்மை பணிகள் கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. அங்குள்ள சாக்கடைகளில் தூர்வாரி சுகாதாரத்தை மேம்படுத்தினர்.

மேலும், அரசு கள்ளர் துவக்கப் பள்ளியில் முதல மைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தனர். மேலும் பாதாள சாக்கடை இணைப்பு கோரி மனு கொடுத்தவர்களுக்கு உடனடியாக இணைப்புகள் வழங்க கமிஷனர் உத்தரவிட்டார்.

தொடர்ந்து இறப்புச் சான்று மற்றும் பிறப்புச் சான்று இரண்டு நபர்களுக்கு மனுவின் அடிப்படையில் உடனடியாக வழங்கப்பட்டது. அப்போது நகர்மன்ற உறுப்பினர் முருகேசன், நகராட்சி பொறியாளர் குணசேகரன், சுகாதார அலுவலர் மணிகண்டன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

▶ போடி 23வது வார்டில் மக்களை தேடி நகராட்சி நிர்வாகம் முகாம் நடைபெற்றது.

வாலிபர் தூக்கிட்டு தற்கொலை

போடி, ஜூன் 14: தேனி மாவட்டம் போடி அருகே பெருமாள் கவுண்டன்பட்டி நடுத்தெருவை சேர்ந்தவர் செந்தில்குமார். இவரது மனைவி ஞானமணி. இவர்களது மகன்கள் சக்தி மணிகண்டன் (27), ஞானசேகரன் (26). கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஞானமணி இறந்து விட்டார். இதையடுத்து செந்தில்குமார் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி கோயம்புத்தூர் சென்று விட்டார். இதனால் சக்தி மணிகண்டன், ஞானசேகரன் ஆகியோர் கூலி வேலை செய்து உறவினர் வீடு, ஹோட்டல்களில் சாப்பிட்டு வந்துள்ளனர். தாயை இழந்து தந்தையை பிரிந்து வாழ்ந்ததால் ஞானசேகரன் மதுப்பழக்கத்திற்கு அடிமையானார். இந்நிலையில், நேற்று முன்தினம் ஞானசேகரன் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து சக்தி மணிகண்டன் கொடுத்த புகாரின் பேரில் போடி தாலுகா போலீசார் உடலை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

திருமணமான சிறுமி கர்ப்பம்

5 பேர் மீது வழக்கு

வருசநாடு, ஜூன் 14: தேனி மாவட்டம், வருசநாடு பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் 16 வயது சிறுமிக்கு திருமணம் நடைபெற்றதாக கடமலை-மயிலை ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவலர் மலர்கொடிக்கு தகவல் கிடைத்தது. இதுதொடர்பாக அவர் விசாரணை மேற்கொண்டார். இதில், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியை சேர்ந்த 16 வயது சிறுமிக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வருசநாடு அருகே உள்ள கிராமத்தில் திருமணம் நடைபெற்றதும், அவர் தற்போது கர்ப்பமாக இருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து கடமலைக்குண்டு போலீசில் மலர்க்கொடி புகார் கொடுத்தார். அதன்பேரில் சிறுமியை திருமணம் செய்த சரத்குமார், குடும்பத்தினர் 4 பேர் மீது கடமலைக்குண்டு போலீசார் போக்சோவில் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தேனி வேலைவாய்ப்பு அலுவலகத்தில்

எஸ்.ஐ தேர்வுக்கான இலவச நேரடி பயிற்சி

தேனி, ஜூன் 14: தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சார்பு ஆய்வாளர் பணிக்கான தேர்வுக்கு இலவச நேரடி பயிற்சி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடந்து வருகிறது.

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையத்தால் சார்பு ஆய்வாளர்கள் பதவிக்கான 1299 காலிப்பணியிடங்களுக்கு தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான இலவச நேரடி பயிற்சி வகுப்புகள் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 24ம் தேதி முதல் நடந்து வருகிறது. இலவசப் பாடக்குறிப்புகள் மற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மாதிரி தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்பில் பயின்று ஏற்கனவே தேர்ச்சி பெற்ற 19 பேர் காவல் துறையில் சார்பு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இத்தேர்வில் அதிக மாணவர்களை தேர்ச்சி பெற செய்வதை இலக்காகக் கொண்டு சார்பு ஆய்வாளர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மூலம் இலவச பயிற்சி வகுப்பு சிறப்பாக நடந்து வருகிறது. எனவே, தேனி மாவட்டத்தை சேர்ந்த சார்பு ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் நேரடி இலவச பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடையலாம். இப்பயிற்சி வகுப்பில் சேருவது தொடர்பாக தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரிலோ, 6379268661 என்ற செல்போன் எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என தேனி மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத்சிங் தெரிவித்துள்ளார்.

பிளாஸ்டிக் பொருட்கள் தவிர்ப்போம்! மரம் வளர்த்து மழை பெறுவோம்!!

ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி

தேனி மாவட்டம், பகிரங்க பொது ஏல அறிவிப்பு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கான அறிவிப்பு

ந.க.எண்.933/2024/தஎ நாள்: 12.06.2025

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் கீழ்க்காணும் இனங்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டுக்கு அனுபவித்துக் கொள்ளும் பகிரங்க பொது ஏலம் 02.07.2025ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு செயல் அலுவலரால், ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் நடத்தப்படும் ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத் தொகையினை 30.06.2025ம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிவரை 'செயல் அலுவலர் ஆண்டிபட்டி பேரூராட்சி' என்ற முகவரிக்கு ஆண்டிபட்டியில் செலுத்தத்தக்க வங்கி வரைவோலை மூலமாக மட்டுமே செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏல விளம்பரம் ந.க.எண்.933/2024/தஎ, நாள்.12.06.2025 ஏலவிளம்பர நோட்டீஸினை அலுவலகத்தில் சென்று பெற்று தெரிந்து கொள்ளலாம். மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க விரும்புபவர்கள் 30.06.2025 ந் தேதி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மற்றும் 02.07.2025ம் தேதி காலை 10.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகளை எந்த ஏல இனத்திற்கு என்று தெளிவாக மேலுரையில் எழுதி ஒப்பந்தப்புள்ளி வழங்குவதற்கு உரிய பதிவுகளை செய்து கொண்டு ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக வங்கி வரைவோலையை இணைத்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கான பெட்டியில் போட்டுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது. 02.07.2025ந் தேதி காலை 10.00 மணிக்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டேவணித்தொகை ஏலம்/ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியே வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும் (இனம் வாரியாக).மறு ஏலங்கள்/ ஒப்பந்தப்புள்ளி ஆண்டிபட்டி பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்குட்பட்டது. இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ரூ.100/- தொகை செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

(பொதுப்பணித்துறை மூலம் மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)

வ. எண்	ஏல இனங்களின் விபரம் / கடைகளின் விபரம்	கட்ட வேண்டிய டேவணித் தொகை	தேவையான சொத்து மதிப்பு சான்று (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)	சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் கலம் 3ல் கண்டுள்ள டேவணி தொகையுடன் சேர்த்து கூடுதலாக செலுத்த வேண்டிய டேவணித் தொகை
1	2	3	4	5
1.	கடை எண்.01	2,00,000	5,00,000	2,00,000
2.	கடை எண்.02	2,50,000	5,00,000	2,00,000
3.	கடை எண்.03	2,50,000	5,00,000	2,00,000
4.	கடை எண்.04	2,50,000	5,00,000	2,00,000
5.	கடை எண்.05	2,50,000	5,00,000	2,00,000
6.	கடை எண்.06	2,00,000	5,00,000	2,00,000
7.	கடை எண்.07	2,00,000	5,00,000	2,00,000
8.	கடை எண்.08	2,00,000	5,00,000	2,00,000
9.	கடை எண்.09 (மாற்றுத் திறனாளிக்கு ஒதுக்கப்பட்ட கடை)	2,00,000	5,00,000	2,00,000
10.	கடை எண்.10	2,00,000	5,00,000	2,00,000
11.	கடை எண்.11	2,50,000	5,00,000	2,00,000
12.	கடை எண்.12	2,50,000	5,00,000	2,00,000
13.	கடை எண்.13	2,50,000	5,00,000	2,00,000
14.	கடை எண்.14	2,50,000	5,00,000	2,00,000
15.	கடை எண்.15	2,00,000	5,00,000	2,00,000
16.	கடை எண்.16	2,00,000	5,00,000	2,00,000
17.	கடை எண்.17	2,00,000	5,00,000	2,00,000
18.	கடை எண்.18	2,00,000	5,00,000	2,00,000

செயல் அலுவலர்
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம்

வெ.ஆ.எண்: 148/25/செ.ம.தொ.அ./தேனி/
நாள்: 13.06.25

செக்யூரிட்டியை தாக்கியவர் மீது வழக்கு

தேவதானப்பட்டி, ஜூன் 14: வைகை அணை அருகே வரதராஜநகரில் தனியார் சர்க்கரை ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை வளாகத்தில் நேற்று முன்தினம் ஆடுகள் உள்ளே புகுந்துவிட்டது. இந்த ஆடுகளை ஆலையின் செக்யூரிட்டி கெப்பணன்(58) என்பவர் ஓட்டிக்கொண்டு வந்து வெளியே விட்டுள்ளார். அப்போது ஆடுகளின் உரிமையாளர் குள்ளப்புரத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவர் செக்யூரிட்டி கெப்பணகை தாக்கி கீழே தள்ளிவிட்டு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து கெப்பணன் ஜெயமங்கலம் போலீசில் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம். பி பில்டிங், கங்கா ட்ரூனோ. லோஹேகான். புனே. மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: இரண்டாவது தளம். தி ஓவல். வெங்கட்நாராயணா சாலை, தி.நகர். சென்னை, தமிழ்நாடு-600017.

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ்
கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக நிரல் (J) இல் குறிப்பிட்டுள்ள நாளில் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் {A}	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை {B}	சுவாதீனத் தன்மை {C}	சொத்தின் விவரம் {D}	நிர்ணய விலை {E}	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) {F}	முன்வைப்புத் தொகை செலுத்தும் {G}	ஏல உயர்வுத் தொகை {H}	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் {I}	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் {J}	வெற்றித் விண்ணப்பங்கள்/ நிதியிலிருந்து வழங்குதல் வெற்றித் ஏலதாரர் {K}
3	கடன் எண்: HM0126H16100319 கருப்புசாமி (கடன்தாரர்), கண்ணகி M (உப கடன்தாரர்)	கோரிக்கை அறிவிப்பு தேதி: 25.06.2021 மொத்த நிலுவைத் தொகை: 25.06.2021 தேதியின்படி ரூ.11,22,056/– (ரூபாய் பதினொரு லட்சத்து இருபத்தாறாயிரத்து ஐம்பத்தாறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 14.05% வட்டி.	கையக சுவாதீனம்	கதவு எண்.23,A.சர்வே எண்:1003/1b & 1003/2b, வார்டு எண்.12, கிழக்கு தெரு, வயல்பட்டி சாலை, வீரபாண்டி அஞ்சல், தேனி மாவட்டம், மதுரை PIN.625534 இல் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள அடமான சொத்து.	ரூ.14,61,600/– (ரூபாய் பதினான்கு லட்சத்து அறுபத்தோராயிரத்து அறுநூறு மட்டும்)	ரூ.1,46,160/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து நூற்று அறுபது மட்டும்)	27/06/2025 Before 5 PM	10,000/-	23/06/2025 (11AM – 4PM)	30/06/2025 (11 AM- 2PM)	எதுவுமில்லை
4	கடன் எண்: HL00494100000000500 8494 யேசு ராஜா V (கடன்தாரர்) தேவி Y (உப கடன்தாரர்)	கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.11.2024 மொத்த நிலுவைத் தொகை: 07.11.2024 தேதியின்படி ரூ.29,54,126/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து ஐம்பத்துநான்காயிரத்து நூற்று இருபத்தாறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 13.00% வட்டி.	கையக சுவாதீனம்	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி துணை பதிவு அலுவலகம், அல்லி நகரம் கிராமம், தேனி அல்லிநகரம் நகராட்சி, அல்லிநகரம் கிழக்கு புலம், வீட்டு மனை அயன் சர்வே எண்.638/3 இல் உள்ள 4 சென்ட்கள் பரப்பளவு, சர்வே எண். 639/1 இல் உள்ள 25 சென்ட்கள் பரப்பளவு, சர்வே எண். 639/2 இல் உள்ள 19 சென்ட்கள் பரப்பளவு, சர்வே எண். 639/3 இல் உள்ள 1 ஏக்கர் 73 சென்ட்கள் பரப்பளவு, சர்வே எண். 639/4 இல் உள்ள 32 சென்ட்கள் பரப்பளவு மொத்தம் 2 ஏக்கர் 53 சென்ட்கள், 20 அடி அகல தெற்கு வடக்கு சாலை மேற்கு பக்கத்தில் உள்ள 93 சென்ட்கள், தெற்கின் கடைசியின் மத்தியில் உள்ள 1719 ச.அடி பரப்பளவு நிலத்துடன் மத்தியில் உள்ள தெற்குவடக்கு பொதுச்சாலை, 5 அடி அகல வடக்கு பக்க கிழக்கு மேற்கு பொது நடைபாதை 2.5 அடி அகல நீங்கலாக, மீதமுள்ள வடமேற்கு பகுதியில் உள்ள 279 ச.அடி மற்றும் தெற்கு பக்கத்தில் 279 ச.அடி மொத்தம் 558 ச.அடி உள்ள வீட்டுமனை சொத்தில் விண்ணப்பதாரரால் கட்டப்பட்ட கதவு எண்206/A6/2 மற்றும் மின்சார வாரிய இணைப்பு, வழக்கமாந நடைபாதை உரிமைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உள்ள சொத்து. மனையின் எல்லைகள்: கிழக்கில்: கிழக்கு மேற்காக 5 அடி அகல தெற்கு வடக்கு பொதுப்பாதை, மேற்கில்: பாத்திமாபீவிக்குச் சொந்தமான அடுத்த வீட்டிற்கு முன் உள்ள தெற்கு வடக்கு பொதுச்சுவர், வடக்கில்: கிழக்கு–மேற்கு குறிஞ்சி நகர் 5 ஆவது தெரு, தெற்கில்: சுப்புராஜுவுக்குச் சொந்தமான கிழக்கு மேற்கு பொதுச்சுவர்.	ரூ.27,44,831/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பத்துநான்காயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்று மட்டும்)	ரூ.2,74,483.1/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து நானூற்று எண்பத்து மூன்று மற்றும் பைசா 10 மட்டும்)	14/07/2025 Before 5 PM	10,000/-	08/07/2025 (11AM – 4PM)	15/07/2025 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுறு வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்யான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20,R.N. Mukerjee road, Kolkatta–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் குறிப்பிடப்பட்ட நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லை மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும், அவற்றின் மூல பிரதியை இரண்டாவது தளம், பி.பிளாக், எண்.5, ஆர்ஜே பிளாசா, காட்பாடி பிரதான சாலை, பாலர் பாலம் அருகே, விருகம்பட்டு, வேலூர்–632006, மேலும் கையேபி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமின்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15/30 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

தேதி: 14.06.2025. இடம்: தமிழ்நாடு ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம